**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. 214/2007**

வாக்குமூலம்: பி.வா.சா.1 – டாக்டர் ஜெயபிரகாஷ் நாராயணன்
20.01.2026 :

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, D-2 to D-5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : நான் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை வில்லங்கம் போட்டு பார்த்தீர்கள் என்றால் சுமார் 30 ஆண்டுகளுக்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு 30 ஆண்டுகளுக்கான வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இருக்கலாம். தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சங்கிலியம்மாள், கருப்பையா அவர்களின் நான்கு மகன்களிடமிருந்து கிரையம் பெற்றேன். வழக்கு சொத்தை எந்த ஆண்டு நான் கிரையம் பெற்றேன் என்றால் கடந்த 1991 ஆம் ஆண்டு கிரையம் பெற்றேன். அந்த காலகட்டத்தில் நான் மருத்துவ இளங்கலை 2 ஆம் ஆண்டு படித்து வந்தேன். எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் தஞ்சை மருத்துவ கல்லூரியில் பயின்று வந்ததேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

தாவா சொத்து கடந்த 10.9.1976 ஆம் ஆண்டு பாக பாத்திய விடுதலை ஆவணம் வாதி தாவா சொத்தில் ரூ.1000/- பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்துள்ளதாக நான் கூறியதற்கு ஆதரவாக ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சுமார் 30 ஆண்டுகளுக்கான தாவா சொத்தில் வில்லங்கத்தை பார்த்துள்ளதால் அதில் வாதிக்கான பங்கு குறித்து காண்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்தில் தற்போது வரை 2 முதல் 5 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. என்னுடைய சுவாதீனத்தில் தான் இருந்து வருகின்றோம். தாவா சொத்திற்கு சொத்து வரி கட்டியுள்ளேன். மேற்படி சொத்து வரி எனது தாயார் பெயரிலும், எனது பெயரிலும் கட்டப்பட்டதற்கான ஆவணம் ஏற்கனவே வாதி எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் தாக்கல் செய்த வழக்கில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வாதி வெளியூர் போன சமயம் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஒரு பொய்யான ஆவணம் காண்பித்து கடந்த 14.06.1991 ஆம் ஆண்டு கிரையப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் இல்லை. அந்த காலகட்டத்தில் வாதியும் உடன் இருந்தார். விடுதலை ஆவணத்தை பார்த்து உறுதி செய்த பிறகு தான் கிரையம் வாங்கினேன். வாதிக்கு தாவா சொத்தில் 5 ல் ஒரு பாகம் இருக்கிறது என்றாலும் நான் வாதி உடன் இருந்தார் என்று பொய் சொல்கிறேன் என்றாலும், இல்லை நான் வண்மையாக மறுக்கிறேன். நான் நல்லெண்ணத்தின் பேரில் தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/-சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.